செ.வெ.எண்: 18/மே நாள்: 07.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம், திருவாடானை, முதுகுளத்தூர், பரமக்குடி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்று வரும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி மற்றும் தபால் வாக்கு பதிவு செய்யும் பணிகளை

## மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ஐ முன்னிட்டு தேர்தல் முன்னேற்பாடு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்விதமாக இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செய்யது அம்மாள் மேல்நிலைப்பள்ளி, திருவாடானை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சி.கே.மங்கலம், பிரான்சிஸ் மேல்நிலைப்பள்ளி, முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முதுகுளத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கீழ முஸ்லீம் மேல்நிலைப்பள்ளி ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற்று வரும் பயிற்சி வகுப்புகளை இன்று (07.05.2016) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து தெரிவித்ததாவது:-

இன்று நடைபெறுகின்ற பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு இங்கேயே தபால் வாக்கு அளிப்பதற்காக அனைத்து வசதிகளும் அந்தந்த பயிற்சி அளிக்கும் வகுப்பறைகளிலேயே ஏற்பாடு செய்யப்பட்டதன் அடிப்படையில் இங்குள்ள பணியாளர்கள் இப்பயிற்சி வகுப்பிலேயே பாதுகாப்பாகவும், அமைதியாகவும் அவர்களுக்கு உரிய தபால் வாக்குகளை அதற்கென்று அமைக்கப்பட்டுள்ள வாக்குப்பெட்டியில் செலுத்தி வருகின்றனர். இன்று நடைபெறுகின்ற பயிற்சி இரண்டாம் கட்ட பயிற்சியாகவும், அதன்பின்பு 12.05.2016 அன்று இறுதிக்கட்ட பயிற்சியாகவும் மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளும் அனைத்து பணியாளர்களும் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பணிகளை முழுமையாகவும், செம்மையாகவும் அற்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி சட்டமன்ற பொதுத் தேர்தலை நமது மாவட்டத்தில் சிறப்பாக நடத்திட அனைவரும் முன்வரவேண்டும் என தெரிவித்தார்.

இப்பயிற்சி வகுப்பின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மு.அலி அக்பர், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (பரமக்குடி) டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., (இராமநாதபுரம்) திரு.ராம்பிரதீபன், (திருவாடானை) திரு.ராஜசேகரன், (முதுகுளத்தூர்) திரு.ராமையா, உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**